GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT 2023
LIBRARY

Register No. | | | | | | | | |

FAXA

5692–23

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Five – year Regular Course)

Fifth Year – Tenth Semester

CRIMINOLOGY AND PENOLOGY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Give a brief account of prison reforms in India.

   இந்தியாவில் சிறை சீர்திருத்தங்களைப் பற்றி சுருக்கமான விளக்கம் தருக.

2. Define 'Victimless Crime'. What are the remedies available to such victims under the Indian legal system?

   குற்றப்பாதிப்பாளர் இல்லா குற்றத்தை விளக்குக. இந்திய சட்ட அமைப்பில் குற்றப் பாதிப்பாள்ருக்கு கிடைக்கக்கூடிய தீர்வுகள் என்ன?

3. Explain Lombroso's theory of criminality.

   லாம்ரசோவின் குற்றவியல் கோட்பாட்டை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. 'Capital punishment' should it be fully abolished? Discuss.

   மரண தண்டனை என்பது முழுமையாக நீக்கப்பட வேண்டுமா? விவாதிக்கவும்.

5. What are the advantages and limitations of open air prisons?

   திறந்தவெளி சிறைசாலைகளின் நன்மை, தீமைகள் யாவை?

6. Give an account of the salient features of the Probation of Offenders Act, 1958.

   நன்னடத்தை சட்டம், 1958-ன் சிறப்பியல்புகளை தொகுத்தளிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Marginal crimes

குறு குற்றங்கள்

(b) Borstal school

இளங்குற்றவாளி சீர்திருத்தப்பள்ளி

(c) Bio-physical factor

உடலமைப்பு காரணி

(d) Religion and Crime

சமயமும் குற்றமும்

(e) Female criminality

பெண்மை சார்ந்த குற்றத்தன்மை

(f) Habitual offenders

வழக்கமாகக் குற்றமிழைப்போர்

(g) Chromosomal factor

மரபு அணுக்காரணி

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றம் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' a police officer and his team, while arresting 'B' was about to get attacked by him with a knife. So 'A' shot 'B' to avoid the situation. In consequence, 'B' dies. Discuss the consequences of A's behaviour.

'அ' என்ற காவல் அதிகாரியும் அவரது குழுவும், 'ஆ' என்பவரை கைது செய்யும் பொழுது, அவரால் கத்தி கொண்டு தாக்கப்படும் சூழல் ஏற்படுகிறது. சூழ்நிலையை தவிர்பதற்காக 'அ' என்பவர் 'ஆ'-வை சுடுகிறார். இதன் விளைவாக 'ஆ' இறக்கிறார். 'அ'-வின் செயலை பற்றி விவாதிக்கவும்.

9. 'B' a doctor gives pills to 'C' for abortion. 'C' after returning home takes the pills and on the same day dies. Discuss the nature and consequences of B's act.

'ஆ' என்ற மருத்துவர் 'இ'-யிற்கு கருச்சிதைவிற்கான மாத்திரைகளை அளிக்கிறார். 'இ' தனது வீட்டிற்கு சென்ற பின்னர் மாத்திரைகளை எடுத்துக் கொள்கிறார் மற்றும் அதே நாளன்று இறந்தும் விடுகிறார். 'ஆ'-வின் செயலின் தன்மையையும் விளைவுகளையும் விவாதிக்கவும்.

10. 'A' a mentally retarded man undress himself in a crowded street and walks. Analyse the behaviour of 'A' with relevant theory.

'அ' என்ற மனநிலை பாதிக்கப்பட்ட ஆண் மக்கள் அதிகமுள்ள தெருவில் தனது ஆடைகளை களைந்து நடக்கிறார். 'அ'-வின் செயலை தகுந்த கோட்பாடு கொண்டு கூர்ந்து ஆய்கவும்.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT 2023
LIBRARY

Register No. | | | | | | | | |

**FAXB** **5693–23**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

FIVE YEAR B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Five – year Regular Course)

Fifth Year – Tenth Semester

INTELLECTUAL PROPERTY LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the origin and functions of World Trade Organisation.

   உலக வர்த்தக அமைப்பு தோற்றம் மற்றும் பணிகள் குறித்து விளக்கவும்.

2. Explain as to what inventions are patentable and what are non patentable?

   எவ்வகை கண்டுபிடிப்புகள் மீது காப்புரிமை பெற இயலும் மற்றும் எவ்வகை கண்டுபிடிப்புகள் மீது காப்புரிமை பெற இயலாது என்பது குறித்து எழுதுக.

3. Define Trade Mark. Explain in detail the limitations to the rights obtained on the registration of Trade Marks.

   "வணிக முத்திரை" என்பதை வரையறு. வணிக முத்திரை பதிவு மூலமாகப் பெறப்படும் உரிமைகளின் மீதுள்ள கட்டுப்பாடுகளை விரிவாக விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Moral rights of author.

   ஆசிரியரின் தார்மீக உரிமைகள்

5. What are the remedies available for Infringement of copy rights.

   பதிப்புரிமை மீறலுக்கு எதிரான தீர்வழிகள் எவை எவை?

6. What is Geographical Indications? What are the procedure for Registration of Geographical Indication?

   புவிசார் குறியீடுகள் என்றால் என்ன? புவிசார் குறியீடுகளின் பதிவு செய்யும் முறையினை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Infringement of patents

காப்புரிமை மீறல்கள்

(b) Term of patent

காப்புரிமை காலம்

(c) Deceptive similarity

ஒத்த தன்மை

(d) Anton pillar order

ஆண்டன் பில்லர் ஆணை

(e) Bayer – Vs– Natco

பேயர்-Vs–நாட்கோ

(f) Passing off

போலித் தன்மை

(g) Rights of Broadcasting organisations and of performers.

ஒலிபரப்பு அமைப்புகள் மற்றும் கலைஞர்களின் உரிமைகள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Varadhan is a scientist. He has invented a device which is useful to the atomic power station. He wants to obtain the grant of patent. Advise Varadhan.

வரதன் ஒரு விஞ்ஞானி. அவர் அணுசக்தி மையத்தில் பயன்படுத்த தக்க ஒரு இயந்திரத்தை கண்டுபிடித்துள்ளார். அதற்கு அவர் காப்புரிமை பெற விரும்புகிறார். அவருக்கு அறிவுரை வழங்குக.

9. Reena has a registered Trade mark "VETA" She gives her consent to Teena to use "VETA". Does it amount to assignment?

ரீனா என்பவர் "வீட்டா" எனும் பதிவு பெற்ற வணிக முத்திரையை வைத்திருக்கிறார். அவர் "வீட்டா" எனும் வணிக முத்திரையைப் பயன்படுத்திக் கொள்ள டீனா என்பவருக்கு இசைவு தெரிவிக்கிறார். இது "மாற்றாக்கம்" ஆகுமா?

10. Ranjani is an Advocate. She took a Xerox copy of a Judgement from a reputed Journal without getting consent from the author of the Journal. Explain whether Ranjani has committed any infringement?

ரஞ்சனி என்பவர் வழக்கறிஞர். அவர் ஒரு மதிப்பு மிகுந்த பத்திரிக்கைத் தொகுப்பில் இருந்து ஒரு நீதிமன்ற தீர்ப்பினை அதன் பதிப்பாசிரியரின் அனுமதியின்றி நகல் எடுக்கிறார். ரஞ்சனி ஏதேனும் உரிமை மீறல் புரிந்துள்ளாரா என விளக்குக.

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT 20
LIBRARY

Register No. | | | | | | | | |

**FAXC**

**5608-23**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Five – year Regular Course)

Fifth Year – Tenth Semester

HUMAN RIGHTS LAW

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following is about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine the provisions dealing with human rights under the Charter of United Nations.

   ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் கீழ் மனித உரிமைகள் குறித்து கூறப்பட்டுள்ள வகையங்களை ஆராய்க.

2. Discuss in detail the rights provided to children under the Convention on Rights of Child, 1989.

   1989-ம் வருடத்திய குழந்தைகள் உரிமைகள் உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள குழந்தைகளின் உரிமைகளை விரிவாக விவாதிக்க.

3. Discuss the role of the Supreme Court in incorporating international human rights in Indian legal system.

   சர்வதேச மனித உரிமைகளை இந்தியாவின் சட்ட அமைப்புக்குள் கொண்டுவந்ததற்கான உச்ச நீதிமன்றத்தின் பங்களிப்பை விவாதிக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the significance of Protection of Human Rights Act, 1993.

   1993-ம் வருடத்திய மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் சிறப்பை விவாதிக்க.

5. Explain the role of N.G.Os in the field of safeguarding human rights in India.

இந்தியாவில் மனித உரிமைகளை பாதுகாக்க அரசு சாரா அமைப்புகளின் பங்களிப்பை விவரிக்கவும்.

6. Discuss the powers and functions of National Commission for Women.

தேசிய பெண்கள் ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Legal status of refugees in India.

இந்தியாவில் நாடற்றவர்களின் சட்ட நிலை.

(b) Prisoners of war.

போர் கைதி.

(c) Right to Education.

கல்வி கற்கும் உரிமை.

(d) Maneka Gandhi v. Union of India (AIR 1978 SC 597).

மேனகா காந்தி - எதிர் - இந்திய ஒன்றியம் (AIR 1978 SC 597).

(e) The Social Contract theory.

சமூக ஒப்பந்த கொள்கை.

(f) Hard Law principles of Human Rights Law.

மனித உரிமைச் சட்டத்தில் கடின சட்ட விதி.

(g) International Labour Organisation.

சர்வதேச தொழிலாளர் ஒருங்கிணைப்பு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' owed Rs. 10,000/- to 'B'. 'B' filed a suit and got decree in his favour because 'A' failed to pay the amount. 'B' executes the decree against 'A' seeking arrest and detention in civil prison when he did not have means to lead life. In such circumstances, can 'B' seek arrest and detention against 'A'. If yes, whether it amounts to violation of human rights? Decide with decided case laws.

'ஆ' விடம் 'அ' ரூ.10,000 கடன்பட்டவர் ஆவார். கடனை திருப்பிக் கொடுக்காததால் 'ஆ' நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து 'அ'க்கு எதிராக தீர்பாணைப் பெற்றார். அத்தீர்பாணையை நிறைவேற்றம் செய்யும் பொருட்டு 'அ'வை கைது செய்து உரிமையியல் சிறையில் அடைக்க 'ஆ' கோருகிறார். அப்பொழுது 'அ' தனது வாழ்வாதாரத்திற்கு தேவையான பொருள் இன்றி இருக்கிறார். இவ்வாறு 'அ' இருக்கும் சூழ்நிலையில் 'ஆ' வானவர் 'அ'வை கைது செய்து உரிமையியல் சிறையில் அடைக்க கோரமுடியுமா? அவ்வாறு முடியும் எனில் இது ஒரு மனித உரிமை மீறலாகுமா? என்பதை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் தீர்க்க.

9. Columbana government has appointed workers on daily wage basis for laying grounds for conducting olympic games in the country. But the Columbana government has miserably failed to pay minimum wages to workers. The NGO knowing about this, filed a case against government in the Supreme Court saying that failure to pay minimum wage amounts to violation of basic human rights. Can NGO win the case? Decide with decided case laws.

கொழும்பானா அரசானது சர்வதேச ஒலிம்பிக் போட்டியை அந்நாட்டில் நடத்துவதற்கு தேவையான மைதானங்களை அமைப்பதற்கு தினக்கூலி அடிப்படையில் பணியாட்களை நியமித்தது. ஆனால் அவர்களுக்கு குறைந்தபட்ச கூலியை வழங்கவில்லை. இதையறிந்த தன்னார்வ அமைப்பானது உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து குறைந்தபட்ச கூலியைக் கொடுக்காதது மனித உரிமையை மீறியச் செயலாகும் என வாதிட்டது. தன்னார்வ அமைப்பு இவ்வழக்கில் வெற்றி பெறுமா? என்பதை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் தீர்க.

10. 'X' leads life with wife and children after acquittal in various cases like murder and dacoity. The District Superintendent of Police has created a history sheet and directed subordinate officers to keep in surveillance. In such circumstances 'X' has filed a case against this order saying that 'X' has been followed and knocking the house while sleeping at night to find out whether 'X' is in house or not? Further 'X' asserted that it amounts to violation of Art 21 of the Constitution. Can 'X' succeed in the case? Decide with decided case laws.

'X' என்பவர் பல்வேறு கொலை மற்றும் கொள்ளைச் செயல்களில் ஈடுபட்டு விடுதலைக்குப் பின் மனைவி மற்றும் குழந்தைகளுடன் அமைதியான முறையில் வாழ்ந்து வருகிறார். இந்நிலையில் மாவட்ட கண்காணிப்பாளர் அவர் மீது குற்றப்பதிவேடு ஏற்படுத்தி இரவில் வீட்டிலுள்ளாரா என்பதை கண்காணிக்க கீழமை அலுவலர்களுக்கு உத்தரவு பிறப்பித்தார். இவ்வுத்தரவை 'X' என்பவர் வழக்குத் தாக்கல் செய்து இவ்வாறு 'X'யை நோட்டமிடுவது மற்றும் இரவில் வீட்டில் உள்ளாரா இல்லையா என்பதை கண்காணிப்பது மற்றும் தூக்கத்தில் உள்ளவரை எழுப்புவது அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஷரத்து 21-லுள்ள உரிமையை மீறியச் செயலாகும் என வாதிடுகிறார். இவ்வழக்கில் 'X' வெற்றிபெறுவாரா? என்பதை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் தீர்மானிக்க.

---